சூரிய
# காந்தி
SOORIYA GANDHI

பொது சன நூலகம்
16 FEB 1998
மாநகர ... யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 1 திங்கட்கிழமை 16 - 2 - 1998 இதழ் 15

# மூன்று முறிப்பில் கடும் மோதல்

# 20 படையினர் பலி 90 பேர் காயம்

நேற்று முன்தினம் மூன்று முறிப்புப் பகுதியில் ராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றது.

முன்னேற முயன்ற ராணுவத்தின் மீது புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல்களை சரமாரியாக நிகழ்த்தினர்.

புலிகளின் தாக்குதல்களை மோட்டார் ஷெல் தாக்குதல் மூலமும் ஆட்டிலறித் தாக்குதல் மூலமும் படையினர் எதிர் கொண்டனர்.

இம் மோதலில் 20 படையினர் பலியானதாகவும் 90 பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முகம் கொடுக்க முடியாத படையினர் பின் வாங்கினர்

இதேவேளை நேற்று முன்தினம் நண்பகல் 12-30மணியளவில் மூன்று முறிப்புப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 130 பேர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். தாக்குதலின் வேகத்திற்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி விட்டதாகவும், இறந்த இராணுவத்தினரின் மூன்றுசடலங்களுட்பட ஒரு தொகுதி ஆயுதத் தளபாடங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கன் தெரிவித்துள்ளனர்.

இம்மோதலின் போது
பி.கே. எல். எம். ஜி -01
ஏ. கே.எல். எம். ஜி கள் - 02

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலால் கோபுரம் அழியவில்லை

### மேஜர் ஜெனரல் பலகல்ல

கிளிநொச்சித் தாக்குதலின் போது இராணுவத்தின் தொலைத் தொடர்புக் கோபுரத்தை விடுதலைப் புலிகள் முற்றாக அழித்து விட்டனர் என்ற செய்தியில் எதுவித உண்மையுமில்லையென மேஜர் ஜெனரல் பலகல்ல தெரிவித்துள்ளார்: தாக்குதலின் போது சில கேபிள்கள் மட்டுமே சேதப்பட்டதாகவும் இதனைப் படையினர் மூன்று தினங்களுக்குள் திருத்தி அமைத்து விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சிப்பிரதேசம் படைகளின் கட்டுப்பாட்டில்

கிளிநொச்சியும் அதனை அண்டிய பகுதிகளும் பாதுகாப்புப் படையின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக நேற்று இலங்கை வானொலி அறிவித்தது.

நேற்று அதிகாலை இப் பிரதேசங்களின் பாதுகாப்பு எல்லைக்குள் ஊடுருவி பலத்த தாக்குதலை நடத்த விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேற்கோள்காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

இத்தாக்குதல் குறித்து 48 மணித்தியாலயங்களுக்கு முன்னதாகவே தகவல்கள்கிடைத்தகாகவும் இதனால் கிளிநொச்சி' பரந்தன் பகுதியில் உள்ள ராணுவமுகாம்களுக்கு ஏற்படக் கூடிய பெரும் பாதிப்புக்கள் தவிர்க்கப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன:

## மட்டக்களப்பில் மோதல் 5 இராணுவத்தினர் பலி

மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப்புகளின் தாக்குதலினால் ஐந்து படையினர் உயிர்இழந்துள்ளனர் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு எல்லைப்பகுதியான அரணபுரபகுதியில் புலிகள் நடத்தியதாக்குதலினாலேயே இப்படையினர் கொல்லப்பட்டனர்

இத்தாக்குதலினால் புலிகள் தரப்பில் இழப்புக்கள் எதுவும் இல்லை எனவும். தாக்குதலைத் தொடர்ந்து படையினர் அவ்விடத்தை விட்டு சென்று விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

இத்தாக்குதலில் பல ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக புலிகள் அறிவித்

(6ம் பக்கம் பார்க்க)

## காக்கை தீவில் மோதல்கள் அதிகாலை முதல்பலத்த தேடுதல்

(யாழ்ப்பாணம்).

ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து காக்கைதீவு செல்லும் வீதியிலுள்ள குருஸ் மதவடியில் இருபகுதியினருக்குமிடையே பலத்த மோதல்கள் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

தொடர்ச்சியாக சுமார் இரண்டு மணித்தியாலங்சுளிற்கு மேலாக நடைபெற்ற இம்மோதல்களையடுத்து காலை முதல்அப்பகுதி ராணுவத்தினரின் பலத்த தேடுதலுக்கு உள்ளானதுடன் வீதியில் சென்ற பொதுமக்களும் தடுத்து விசாரிக்கப்பட்டதாகவும் மோதல் நடைபெற்ற பகுதியில் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்டு காணப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். இருபகுதியினருக்குமிடையேயான இழப்புகள் பற்றிய எந்தவிதமான ஊர்ஜிதமான செய்திகளும் இச்செய்தி அச்சேறும் வரை கிடைக்கவில்லை.

### கனகராயன் குளத்தில் இருந்து

## முன்னேறிய இராணுவம் மாங்குளத்தில் சண்டை.

கனகராயய்ன் குள்த்திலிருந்தும் ஒலுமடுப்பகுதியில் இருந்தும் முன்னேறிய ராணுவம் மாங்குளத்தைச் சுற்றி வளைத்துள்ளதாக இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்சுள் தெரிவித்துள்ளன,

மாங்குளம் தென்பகுதியில் நேற்று முன்தினம் காலை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த சண்டை நேற்று நன்பகல் வரை நீடித்ததாகவும் இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகவும் படையினர் தரப்பில் பன்னிரண்டு பேர் பலியானதாகவும் படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

இதேவளை விடுதலைப் புலிகள் அகோர மோட்டார் ஷெல்தாக்குலை நடாத்திவருவவும் பாதுகாப்பு வட்டாங்க தெரிவித்துள்லன.

## இரு புலிகள் களப்பலி

நேற்று முன்தினம் மூன்று முறிப்பில் இடம் பெற்ற மோதலில் இரண்டு போராளிகள். வீரச்சாவடைந்துள்ளனர்.

வீரவேங்கை இசைவாணன் (தர்மராசா) கிளிநொச்சி.

வீரவேங்கை சுகுணன் (ஆறுமுகம் ராமு) அம்பாறை ஆகிய போராளிகளே வீரச் சாவடைந்தவர்களாவர்.

## இன்று இந்தியத் தேர்தல்

இந்தியாவின் பன்னிரண்டாவது மக்களவைத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது.

தமிழ்நாடு உள்ளிட்ட பதினைந்து மானிலங்களிலும். டில்லி மற்றும் நான்கு யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 222 மக்களளைத் தொகுதிகளுக்கு இன்று வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

இன்றைய முதற்கட்ட வாக்களிப்பில் சுமார் ஒரு கோடியே எழுபத்தேழு இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 21,000 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் வாக்களிப்பில் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தாதென தேர்தல் அவதானிகள் அடுத்துத் தெரிவித்துள்ளனர்.

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பாவனையில் உள்ள நல்ல குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. த. துரைராசா, 100/2, அரசடி றோட், கந்தர்மடம்.

### மணமகன் தேவை

கொழும்பில் வேலைசெய்யும் 28 வயதான அழகான க. பொ. த. (உ. த) வரை படித்தபெண்ணுக்கு கொழும்பில் வேலை செய்யும் மணமகன் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை விளம்பர இல. 63 ''சூரியகாந்தி'' ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

### பால் பசு தேவை

நல்ல இன பால்பசுதேவை. தற்போது பால் தரும் நிலையில் இருக்க வேண்டும். விளம்பரதாரர் 138, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம்.

### ஆங்கிலப் பயிற்சி நூல்

இலகு நடையில் பேச்சு ஆங்கில புத்தகங்கள் எழுதக் கூடியவர் தேவை பரணன் அசோசியேட்ஸ் 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### தொகையாகப் பெற்றுக்கொள்ள

சுப்பர்மக்ஸ்பிளேட்,ஃபிலிம் றோல். எவரெடி பற்றறி, லெட் பென்சில்கள், பொக்ஸி பேனாக்கள். பரணன் அசோசியேட்ஸ், 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விளம்பரம் செய்ய

''சூரிய காந்தி''யில் விளம்பரம் செய்ய எம்மை அணுகுங்கள். பரணன் அசோசியேட்ஸ், 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம.

### தவறிவிட்டது

கணேசன் யசோதை ஆகிய நான் 12-1-98 அன்று பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கவநத கடைசி நேர மினி பஸ்ஸில் பிரயாணம்செய்த போது ஒரு பேஸ் சுடன் தேசிய அ. அட்டை விசேட அடையாள அட்டை தொழில் அட்டை என்பன தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் 5ம் வாட்டில் ஒப்படைக்கவும்

15/5, வைமன் வீதி,யாழ்ப்பாணம் நித்தியானந்தன் ஜெயதர்சினி என்பவருடைய விசேட அடையாள அட்டை நல்லூர் பிரதேசத்திற்கிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து 68/1, இராசாவின தோட்ட வீதியில உள்ள ''சூரிய காந்தி'' பணிமனையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

### காசோலையைப் பெற்றுக் கொள்ளவும்

பாடசாலைகளில் திருத்த வேலைகளை முடித்தவர்களுக்குரிய காசோலைகள் யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் பாடசாலைகள் வேலைப் பகுதியின் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வழங்கப்படுவதால் மேற்படி திருத்த வேலைகளை மேற்கொண்ட அதிபர்கள் காலந்தாழ்த்தாது உடனடியாக வந்து காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(சி-1)

# கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு

# 55 பேர் பலி 180 பேர் காயம்

கோயம்புத்தூரில் நேற்று முன்தினம் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஐம்பத்தைந்தாக அதிகரித்துள்ளது, நூற்றி எண்பது பேர் காயமடைந்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக தமிழ் நாட்டில் இதுவரை அறுநூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் ''அல்ஹிமா'' ''ஜிஹாத்'' கமிட்டி முஙவர்களும் சமூக விரோதிகளும் அடங்குவர்.

இச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா நட்டஈட்டுத்தொகையாக வழங்கப்படுமென தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று அறிவித்துள்ளார்.

இதேவேளை முதலமைச்சர் மு. கருணாநிதி இராஜினாமாச் செய்ய வேண்டுமென அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி. ஜெயலலிதா கேட்டுள்ளார்.

### பாலர் பாடசாலை திருத்தப்பட்டது

குட்டியப்புலம் பாலர் பாடசாலை அகதிகளுக்கான யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் திருத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. இங்குள்ள பல நோக்குக்கூட்டுறவு சங்கக் கிளையும் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

## கோயம் புத்தூரில் கலவரம் ஏற்படும் அறிகுறி முஸ்லீம் மக்கள் வெளியேற்றம்

கோயம்புத்தூரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் இன ரீதியான கலவரங்கள் ஏற்படலாமென்ற அச்சம் தோன்றியுள்ளது.

இதனைத்தொடர்ந்து கோயம்புத்தூரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள முஸ்லீம் மக்கள் அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கில் வெளியேறிச் செல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கோயம்புத்தூரில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

### டிப்ளோமா பரீட்சை அனுமதி அட்டை

தேசிய கல்வி நிறுவக (மகரகம) பட்டப்பின் கல்விடிப்ளோமா பரீட்சைகளுக்குரிய (பகுதி 1 பகுதி 2) அனுமதி அட்டைகளை யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு பட்டதாரி ஆசிரிய மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர். மேற்படி பரீட்சைகள் பகுதி ஒன்று எதிர்வரும் 21 ஆம்22 ஆம் திகதிகளிலும் பரீட்சை இரண்டு எதிர்வரும் 28லும் மார்ச் மாதம் முதலாந்திகதிகளிலும் நடைபெறவிருக்கின்றன. (சி-1)

## கோயம்புத்தூர் சம்பவம் பின்னணியில் பாகிஸ்தான்

கோயம்புத்தூரில்இடம்பெற்ற் குண்டு வெடிப்பிற்குபாகிஸ்தானின்ஐ. எஸ். ஐ.யும் சில வெளிநாட்டு சக்திகளுமே காரணம் என இந்திய மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் ஹார்க்கிசன் சிங் சுர்ஜித் உட்பட பல அரசியல் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

பெங்களூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இக்குண்டுவெடிப்பு ஐ. எஸ். ஐ. உளவு ஸ்தாபனத்தின் பாரிய திட்டத்தின் ஒரு சிறுபகுதியே எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை எவரும் தேர்தல் நன்மைக்காகப் பயன்படுத்தக் கூடாதெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

### கலந் துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18ந் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது'

மைமன் வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையில் நடைபெறும் இக் கலந்துரையாடலுக்கு அனைத்து கால்நடைவைத்தியர்களும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், செயலாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ந் திகதி காலை 9-00 மணிக்கு பிறவுண் வீதியில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் நடையெறும்.

இந்நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் ஏற்கனவே உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## கருணாநிதி மூப்பனார் கோயம்புத்தூர் விரைவு

கோயம்புத்தூரில் நடந்த குண்டு வெடிப்பு குறித்து தேவைப்பட்டால் மத்திய புலனாய்வுப்பிரிவு விசாரணை நடத்துமென தமிழ்நாடு முதலமைச்சர் மு, கருணாநிதி நேற்று அறிவித்தார்.

தேர்தல் நடைமுறைகளை நிலைகுலையச் செய்யும் வெளிநாட்டுச் சதித்திட்டமே இந்தக்குண்டு வெடிப்பு எனத் தெரிவித்த முதலமைச்சர் இது குறித்து பூரண விசாரணை நடத்தப் படுமெனவும் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு நடந்த மருத்துவக் கல்லூரிக்கு முதலமைச்சரும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனாரும் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

### பாலதிருத்த வேலைகள்

யாழ். பருத்தித்துறை வீதியில் வல்லைப்பகுதியின் புனரமைப்பு செய்யப்பட்ட பால வேலையொன்று இடையில் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ் பிரதேச செயலக பிரிவு உதைபந்தாட்டப் போட்டி இன்று 16 ஆம் திகதி திங்கட் கிழமையும் நாளை 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. என யாழ். விளையாட்டு அதிகாரி ஏ. ரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

16 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நாவாந்துறை கலைவாணிவிளையாட்டுக்கழமும் கொய்யாத் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

அன்று மாலை 4 மணிக்கு யாழ் பாரதி விளையாட்டுக் கழகமும் கிறீன் கிறிஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

17 ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகமும் சென்றோக் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

அன்று மாலை 4 மணிக்கு வைக்கிறிஸ் விளையாட்டுக் கழகமும் சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதவுள்ளது.

## கோயம்புத்தூரில் படையினர் அத்துமீறல்

கோயம்புத்தூரில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தினை தொடர்ந்து பாதுகாப்பு கடமைகளுக்காக பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிசாரும் அந்நகரில் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கோயம்புத்தூரில் குற்றவாளிகளை தேடுவதாக கூறி பல கடைகளை அடித்து நொருக்கியதுடன் பெண்கள், குழந்தைகள் மீது அத்து மீறல் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதே வேளை தமிழக முதல்வர் மு.கருணாநிதி குற்றவாளிகளை கைது செய்வதற்கு படையினருக்கும், பொலிசருக்கும் பூரண சுதந்திரம் வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்கூத்து இசை நாடகப்போட்டி

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகம் நாட்டுக்கூத்து இசை நாடகப் போட்டி ஒன்றை எதிர் வரும் ஏப்ரல் மாதம் நடாத்தவுள்ளது.

மரபு வழி நாட்டுக் கூத்துக்களின் செம்மையையும் மரபு வழி இசை நாடகத்தின் சுவையையும் துலங்கும் நோக்குடனும் இதில் ஈடுபடும் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் கலைஞர்களை பாதுகாக்கும் நோக்குடனும் ஒட்டுமொத்தமாகபாரம்பரிய கலைகளைப் பாதுகாப்பதற்காக நாட்டுக்கூத்து, இசை நாடகப் போட்டி நடத்தப்படுவதாக இக்கழக செயலாளர் செ. மெற்றாஸ் மயில் தெரிவித்தார்.

இதில் வெற்றிபெறும் நாடகங்களுக்கான பரிசு விபரம் வருமாறு நாட்டுக்கூத்துமுதல் பரிசு 5000 ரூபா இரண்டாம் பரிசு 3000 ரூபா மூன்றாம் பரிசு 1500 ரூபா

நாட்டுக்கூத்து (சிந்து நடை முதல் பரிசு- 5000 ரூபா இரண்டாம் பரிசு- 3000ரூபா மூன்றாம் பரிசு 1500 ரூபா

மேலும் போட்டியில் பங்கு பற்றும் போது ஒவ்வொரு நாட்டுக் கூத்து, இசை நாடகம் என்பனவற்றுக்கு 2500 ரூபா மேடையேற்றும் செலவாக வழங்கப்படும் இப் போட்டிக்கு வயதுக்கட்டுப்பாடு கிடையாது நிகழ்வு ஒரு மணத்தியாலம் ஆக அமைய வேண்டும் நாட்டுக் கூத்து, இசை நாடகத்தின் கதைகள் புராண இதிகாச சமய கதைகளாக மட்டும் இருக்க வேண்டும்.

போட்டியில் பங்கு பற்றுபவர்கள் செ. மெற்றாஸ் மயில் செயலாளர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் 12/1, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

### கலப்பட விபூதி

யாழ் நகரில் தற்போது வனிலா கலந்த விபூதி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வனிலா உணவுப் பொருட்களுக்கு வாசனையூட்டுவதற்குப் பாவிக்கப்படும் ஒரு பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.

### மரிசலின் இளைப்பாறினார்

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியராக, பகுதித் தலைவராக உப அதிபராக கடமை புரிந்த திரு. மரிசலின் அவர்கள் தனது 40 வருட ஆசிரியப் பணியினின்றும் இளைப்பாறியுள்ளார்.

## கொழும்பு நகரில் மரக்கறி விலை அதிகரிப்பு

கொழும்பு நகருக்குள் வருகின்ற வாகனங்களை பொலீஸார் தீவிரமாகச் சோதனையிடுவதாலும் சோதனைச் சாவடிகளில் ஏற்படுகின்ற காலதாமதம் காரணமாகவும் கொழும்புக்குள் வரும் லொறிகளில் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

மரக்கறி போன்ற பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் தமது கட்டணத்தை உயர்த்தி உள்ளன.

இதனால் கொழும்பு நகரில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

# சூரியகாந்தி

## சமூகவிரோத நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் நிலைமை வழமைக்கு திரும்புகிறது என்பதில் அரசாங்கத்துக்கு ரொம்பவும் பெருமை.

மற்றைய துறைகளில் நிலைமை எப்படியோ தெரியாது, கசிப்பு தயாரிப்பு, வியாபாரம் என்ற இரண்டிலும் நாளுக்கு நாள் முன்னேற்றம் நன்கு ஏற்பட்டு வருகிறது.

நகரத்தில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்தில் பல கிராமங்களிலும் கசிப்பு வியாபாரம் அதிகரித்து வருகிறது.

கடுமையான உடல் உழைப்புச் செய்யும் தொழிலாளி அவன் களைப்புத் தீர, ஏதாவது செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களை நம்பித்தான் கசிப்பு வியாபாரம் நடைபெறுகிறது என்கிறார் சமூக விஷயங்களில் அக்கறை காட்டும் பிரமுகர் ஒருவர்.

கசிப்பு அருந்துவதில் பலர் ஈடுபடுவதற்குக் காரணம் விலை மலிவாக இருக்கிறது, எளிதாக கிடைக்கிறது, நல்ல ''கிக்'' தருகிறது என்பதாக சொல்கிறார்கள்.

இளைஞர்களிடையேயும் பலர் கசிப்பு அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாகிக் கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

குடிக்கு அடிமையாகி விட்டவன் எந்தத் திரவத்தில் போதை கிடைக்கிறது என்றாலும் அதைப்பெற சட்டத்தை மீறவும் தயாராக இருக்கிறான்.

கசிப்பு விற்பனை செய்பவர்களும் எத்தனை தடவை நீதிமன்றத்தில் குற்றம் செலுத்தினாலும் திரும்பவும் அந்தத் தொழிலிலேயே ஈடுபடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்போது நிறையப் பொலீஸாரும் இருக்கிறார்கள் இராணுவத்தினரும் இருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் கசிப்பு வியாபாரம் வளர்ச்சி அடைவது பலருக்கும் கவலை தருகிறது.

கசிப்பு வியாபாரத்தில் இன்னொரு மோசமான விளைவு என்னவென்றால் சமுகத்தை முழுமையாக நாசம் செய்து கொண்டிருக்கும் 'லஞ்சம்' என்பது வளரவும் கசிப்பு காரணமாகிறது.

எங்கே 'கசிப்பு' வியர்பாரம் செழிப்பாக நடைபெறுகிறதோ அங்கெல்லாம் 'லஞ்சம்' வாங்கி தங்கள் வருமானங்களை பெருக்கும் அரச அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகப்பெரிய தடையாக இருப்பவை அரச அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகமும், அவர்கள் மத்தியிலே நிலவும் லஞ்சம் வாங்கும் பழக்கமும்!

எங்கே 'கசிப்பு' தயாரிப்பதும், விற்பனை செய்வதும் நடைபெறுகிறதோ அந்த இடத்தில் உள்ள அரச அதிகாரிகள் நிச்சயமாக நல்ல மனிதர்கள் அல்ல!

அவர்களின் 'முறைக்கேடு' தான் சில இடங்களில் இப்படியான சமூக விரோத நடவடிக்கைகள் பெருகுவதற்கு காரணம்.

## 'சாள்சின் தந்தை பிலிப்ஸ்'' பயன்படுத்திய முதல் கார்

சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் நீக்கப்பட்டிருந்தால் இளவரசர் சாள்ஸ் தமது தந்தையார் பயன்படுத்திய முதலாவது காரைப் பார்த்திருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சாள்ஸின் தந்தையரான இளவரசர் பிலிப்ஸ் 1940 ஆம் ஆண்டு கடற்படை அதிகாரியாக பணியாற்றி இருந்தார்.

இக்காலப் பகுதியிலேயே 1935 ஆம் ஆண்டைச் சேர்ந்த ''ஒஸ்ரின் கேம்பிரிஜ்'' என்ற காரை இளவரசர் பிலிப்ஸ் பயன்படுத்தி இருந்தார். இக்காரினை அவர் 450 ரூபாவிற்கு வாங்கியிருந்தார்.

இக்காரின் தற்போதைய உரிமையாளர் இக்காரிற்காக ரூபா 50,000 த்தை செலவு செய்து பராமரித்து வருவதாக அறிய முடிகிறது.

## காங்கிரஸ் வெற்றியீட்டின் சோனியாவே பிரதமர்

இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டினால் திருமதி சோனியா காந்தியையே பிரதமராக நியமிக்க வேண்டும்.

இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் கே. கருணாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளுக்கு காங்கிரஸ் கட்சியின் பல மட்டங்களிலும் பெருத்த ஆதரவு இருக்கிறது;

திருமதி சோனியா காந்தி வெளிநாட்டவர் எனவும் இந்தியாவின் தலைமைக்கு வெளிநாட்டவரை அனுமதிக்கக் கூடாது எனவும் எழுப்பப்படும் கோஷங்களுக்கு வாக்காளர் மத்தியில் செல்வாக்கு குறைந்து வருகிறது;

கோவை

## குண்டு வெடிப்பை பொறுப்பேற்று கருணாநிதி பதவி விலக வேண்டும்

### செல்வி ஜெயலலிதா

கோவைக் குண்டுவெடிப்பிற்கும் அதில் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்களின் உயிர்களுக்கும் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியே பொறுப்பேற்க வேண்டும் என்றும்.

இதற்காக அவர் தமது முதலமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டு'' என்றும் எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

பாரதீய ஜனதாக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ் நாடு எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா, கருணாநிதி பதவி விலக வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தி. மு. க. விற்கும் தொடர்பிருந்தது எனக் குற்றம் சாட்டி தி.மு.க. தலைவர் பதவி வீலக வேண்டும் எனக் கோரி முன்பு ஒரு தடவை எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியத் தேர்தல் இன்று முதல் கட்ட வாக்களிப்பு

இந்திய பொதுத் தேர்தலுக்கான முதற் கட்டவாக்களிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது 222 தொகுதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது:

இத்தேர்தலில் சுமார் 2200 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஒரு கோடிஎழுபது லட்சம் பேர் நாளைய வாக்களிப்பில் கலந்துகொள்வர். அஸாமில் அல்பா தீவிர வாதிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கணேச வித்தியாலயம் தெரிவானது

வடக்கு - கிழக்கு மாகாண கல்விச் செயலரினால் ஆரம்பக்கல்வியை அபிவிருத்திச் செய்யும் நோக்கமாக மூன்றாண்டுத்திட்டத்தில் நடைமுறைப்படுத்த தீவகத்தில் ஒரேயொரு பாடசாலையாக நாரந்தனை கணேச வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (சி-1)

## காங்கேயருக்கு அஞ்சலி

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தை 1946 ஆம் ஆண்டு ஸ்தாபித்து கல்வியறிவு ஊட்டிய தாபகர் கந்தர் காங்கேயர் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் மேற்படி வித்தியாலய அதிபர் திரு. வி. ஆ. சிவராசா அவர்களின் தலைமையில் 25-2-98-ல் நிகழவிருக்கின்றது. யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பொான். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் 'காங்கேயரின் கல்விப்பணி' எனுந் தலைப்பில் சிறப்புரை வழங்குவார். (சி-1)

## கௌரி அடித்த பந்து மைதானத்தை மேலாகக் கடந்து தெருவில் விழுந்தது

'யாழ் மாவட்டத்திலிருந்து கொழும்பு சென்ற கிரிக்கெட் கோஷ்டியின் மறக்க முடியாத சம்பவங்கள்' என்ற தலைப்பில் ''சம்பத் பண்டார''என்பவர் ''ரசதுண'' பெப்ரவரி 8ம் திகதி இதழில் எழுதியிருக்கிறார்.

''அன்று துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் இன்று பனை மர நிழலில் கிரிக்கெட் விளையாட்டை விரும்பி விளையாடுகிறார்கள். துப்பாக்கிக்குப் பதில் இப்போது அவர்கள் கையில் கிரிக்கெட் மட்டை உள்ளது'' என்கிறார் சம்பத்.

கொழும்பு சி.சி.சி. மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் கொழும்பு வீரர் வீசிய பந்தொன்றை யாழ்ப்பாணத்து வீரர் அடித்த போது அது மைதானத்துக்கு மேலாகச் சென்று தெருவில் விழுந்ததையும், மைதானத்தில் பலத்த கரகோஷம் எழுந்ததையும் சுவைபட வர்ணிக்கிறார் சம்பத்.

அந்தப் பந்தை அடித்தவர் கௌரி!

யாழ்ப்பாணக் கோஷ்டியினர் கொழும்பிலிருந்து மாத்தறைக்குச் சென்ற போது சனத் ஜெயசூரியா வீட்டுக்கும் போக விரும்பினார்கள்.

யாழ்ப்பாணக் கோஷ்டியை வழிகாட்டியாக அழைத்துச் சென்ற கர்ப்டன் வீரசிங்கா ''சனத் ஜெயசூரியா இப்போது நாட்டில் இல்லை'' என்றார்;

அதற்கு யாழ் கோஷ்டியினர் ''ஆள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை அவருடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும்'' என்றார்கள்.

சனத்ஜெயசூரியா வீட்டுக்கு யாழ். கோஷ்டியினர் சென்ற போது அன்பான வரவேற்பு! சனத்ஜெயசூரியாவின் பெற்றோர் யாழ். கோஷ்டியை நல்ல முறையில் உபசரித்ததோடு சனத் ஜெயசூரியா வாங்கியபரிசுகள், 'கப்'புகள், கோப்பைகள் எல்லாவற்றையும் காட்டினார்கள்.

யாழ். கோஷ்டியினர் அந்த வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டபோது நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது.

வடக்கிலிருந்து சென்ற கிரிக்கெட் கோஷ்டியினர் தெற்கில் செய்த பயணம் அருமையானதொரு 'சமாதானப் பால'மாக அமைந்தது என்கிறார் சம்பத் பண்டார!

யாழ்ப்பாண மாணவர்கள் மத்தியில் இப்போது கிரிக்கெட் ஆர்வம் அதிகரித்து இருப்பதாகவும், பெரும்பாலான மாணவர்களின் வீடுகளிலும் அல்பங்களிலும் சனத் ஜெயசூரியா, அரவிந்தடிசில்வா, அர்ச்சுனா ரணதுங்கா, மாவன் அத்தபத்து ஆகியோரின் படங்கள் இருப்பதாகவும் யாழ். கோஷ்டியினர் தன்னிடம் தெரிவித்ததாகக் குறிப்பிடும் சம்பத் பண்டார 'தக்க பயிற்சியும் பொருத்தமான வசதிகளும் செய்து கொடுத்தால் நிச்சயமாக யாழ்ப்பாணத்து வீரர்கள், பலர் இலங்கை அணியில் இடம் பெறுவார்கள்' என்கிறார்.

## முத்திரைக்கு பலத்த தட்டுப்பாடு

தீவகம் உட்பட யாழ் குடாநாட்டின் தபாலகங்களில் முத்திரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகின்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார் வியாபார நிலையங்களில் முத்திரைகள் பெறுமதி விலையிலும் பார்க்க கணிசமான தொகையில் விற்கப்படுவதாக பொது மக்கள் விசனிக்கிறார்கள்.

(சி - )

# சீநோர் தொழிலாளர்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

சீநோர் தொழிலாளர்கள் அபிவிருத்திச் சபை என்ற அமைப்பு ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துளளனர்.

வேலைஇழந்துள்ள சீநோர் தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் குருநகர், காரைநகர்ஆகிய இடங்களில்அமைந்துள்ள, இயங்கா திருக்கும் தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இம்மகஜரில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

# த. வி. கூ. யின் செயற்பாடு யாழ் நகரில் விஸ்தரிப்பு

யாழ் மாநகர சபை தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்தும், யாழ் மாநகர சபை மேயராக திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் பதவியேற்கவுள் ளதை தொடர்ந்தும் கூட்டணி வட்டாரங்களிடையே ஒரு வித சுறுசுறுப்பு ஏற்பட்டு வருகின்றது.

பல்வேறு மட்டங்களிலும் அமைப்பாளர்களை நியமிப்பது தொடர்பாகவும், பிரதேச மட்டங்களிலும், யாழ் நகரிலும் கட்சிப்பணிமனைகளை திறந்து செயற்படுவதிலும் கூட்டணி வட்டாரங்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றன.

# தமிழ்க் கைதிகள் கொலை விசாரணை நடைபெறுகிறது

களுத்துறை சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முன் தினம் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

களுத்துறை சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டிருந்ததமிழ்க் கைதிகள் மூவர் சிங்களக்கைதிகளால் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. இது தொடர்பாக ஏற்கனவே நான்கு கைதிகள் சாட்சியமளித்துள்ளதாகவும், முப்பத்தொரு கைதிகள் சாட்சியமளிக்க முன்வந்துள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேல் நீதிமன்ற நீதிபதி எ.ராஜா நிகால் பெர்ணான்டோ தலைமையில் இயங்கும் இந்த தனிநபர் ஆணைக்குழுவிற்கு பொது அமைப்புக்கள் பலவும் கைதிகளின் கொலை தொடர்பாக தமது கருத்துக்களை எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளனர்.

கைதிகளின் கொலை தொடர்பாக ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென தமிழ்க்கட்சிகள் பலவும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# அதிசய நடராஜர் சிலை திருச்சியில் கண்டுபிடிப்பு

இந்தியாவின் திருச்சி மாவட்டத்தில் உள்ள 'நன்னி மங்களம்' என்ற கிராமத்தில் பூமிக்கடியில் இருந்து பஞ்ச லோகத்தினாலான நடராஜர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கழிவறை ஒன்று கட்டுவதற்காக குழி ஒன்றைத் தோண்டிய சந்திரராஜ் என்பவரே இச்சிலையைக் கண்டெடுத்தவர் ஆவர்.

நடராஜர் சிலைபற்றி மாவட்ட அலுவலருக்கு செய்தி அனுப்பப்பட்டது. பின்னர் மாவட்ட அதிகாரிகள் அடங்கிய குழு அச்சிலையை எடுத்து வந்து தமது அலுவலகத்தில் வைத்துள்ளார்கள்.

6 அடி உயரமும், 100 கிலோ நிறையையும் உடைய இச்சிலை எந்தக் காலத்திற்குரியது என அறிய தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு நாட்டின் சமாதானம் மிக முக்கியமானது

## சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் பேனாட் உரை

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு ஏ. ஐ. பேனாட் அடிகளார் கடந்த பரிசளிப்பு தினத்தில் ஆற்றிய உரையிலிருந்து.....

1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாத முடிவில்..... திடீரென மக்கள் பெருவெள்ளமாக வலிகாமத்திலிருந்து வெளியேற நேரிட்டது.

அப்பெருவெள்ள வெளியேற்றம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டாலும், 65 வீதம் மாணவரே பாடசாலைக்குத் திரும்பியுள்ளனர். குண்டு வெடிகளின் பெரு முழக்கங்கள் எங்கள் பகுதியில் ஓய்ந்து விட்டாலும், அமைதி தோன்றி விட்டதென்று கூற முடியாது.

மாணவர்களின் உடல் நலத்தில் வீழ்ச்சி, ஒரு மனப்படுத்தும் ஆற்றலில் ஏற்பட்டுள்ள நலிவு, உளவியற் தளர்வு, விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் போன்ற பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சனைகள் இவையெல்லாம் அமைதியின்மையின் அடையாளங்களே ''குண்டு வெடிப்புச் சத்தமின்மை சமன் சமாதானம்'' என்பது ஒரு தப்பான சமன் பாடாகும்.

எமது பிள்ளைகளின் கல்வித் தராதரம் மேலும் வீழ்ச்சியுறாது காப்பதற்கு. சமாதானம் மிக அவசரமான தொன்றாகும். அதிகாரம் தாங்குவோர் இதை உணர்ந்தாலன்றோ! ஆனால், சமாதானமோ அண்மிப் பதாகத் தெரியவில்லை.

இந்த நிலைக்கு எமது கல்வி அமைப்பும் நாம் கல்விமட்டில் நமக்கென கொண்டிருக்கும் சில தப்பான முன்னுரிமைகளும் ஓரளவுக்குப் பொறுப் பேற்க வேண்டும். ஆன்மீக அறிவியல் விழுமியங்கள் சேர்க்கப்படாத ஏட்டுக்கல்வி புத்தி ஜீவிகளை உருவாக்கக் கூடும். ஆனால் பிறரின் மாண்பையும் உரிமைகளையும் மதிக்கும் பண்புள்ளம் கொண்டவர்களை உருவாக்கும் என்று கூறமுடியாது. அது தந்திரம் நிறைந்த அரசியல் வாதிகளை உண்டாக்ககூடும். ஆனால் அரசியல் இலாபங்களை எதிர்பார்க்காது. நீதி நியாயத்தால் அணி செய்யப் பட்ட தலைவர்களை உருவாக்கி விடாது.

பிள்ளைகள் யுத்த வாஞ்சையுள்ளோராக மாறாது, சமாதான விரும்பிகளாக உருப்பெற வேண்டுமாயின், அவர்களுக்கு ஊட்டப்படும் கல்வியில் ஆன்மீக ஒழுக்க விழுமியங்கள் ஊறியிருக்கவேண்டும்

# கிளிநொச்சியில் மோதல்

நேற்று முன்தினம்கிளிநொச்சிப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சுமார் 2மணிநேரம் இடம் பெற்ற சண்டையில் 3புலிகள் கொல்லப் பட்டனர் என்றும் படையினர் தரப்பில் சேதம் இல்லை எனவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

# கழுதைகள் மூலம் வாக்குப் பெட்டிகள்

இன்று அரம்பமாகவுள்ள இந்தியத் தேர்தலில் போக்குவரத்து வசதியில்லாத இடங்களுக்கு தலைச்சுமையாகவும் கழுதைகள் மூலமும் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப் படுகின்றன.

# எப்படி விசாரணை

கண்டி குண்டு வெடிப்புச் சம்பவத்தை விசாரிக்கும் குழுவின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் பாதுகாப்பு அமைச்சரின் கீழ் பணி செய்பவர்.

கண்டியில் நடத்தத் திட்டமிடப்பட்ட பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு பொறுப்பாக இருந்தவர் பாதுகாப்பு துணை அமைச்சர் அனுருத்த ரத்வத்தை.

அமைச்சரின் கீழ் செயலாளராக இருப்பவர் அமைச்சரை அழைத்து விசாரிக்க முடியுமா?

தலதா மாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த பலமான இரும்புக் கிராதிகளை நீக்கும் படி உத்தரவு போட்டவர் யார்?

இந்த உத்தரவைப்போட்டவரை அழைத்து விசாரிக்கும் நிலையில் விசாரணைக்குழுவின் தலைவர் இருக்கிறாரா?

உயர்மட்டங்களில் கேட்கப் படும் கேள்விகள் இவை!

# றொமேஷ் குணசேகர நாடுதிரும்புகிறார்

உலகப் புகழ் பெற்ற நாவல் ஆசிரியரன றொமேஷ் குணசேகர இலங்கைக்கு வருகிறார். ''மொங்பிஷ் மூண்'' என்ற சிறு கதையையும் 'றீவ், என்ற நாவலையும் எழுதிய ஆசிரியர் இவரே.

இவர் எழுதிய 'றீவ், என்ற நாவல் 1994 ம் ஆண்டு 'புக்கர்' என்ற பரிசைப் பெற்றுத் தருவதற்கான நாவல்கள் ஐந்தில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

# 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'தினத்தந்தி' ஆதித்தன் 'குமுதம்' அண்ணாமலை சாதனை செய்த பத்திரிகையாளர்!

-சுகுமாரன்-

(நேற்றைய தொடர்ச்சி)

**உள்ளூர் செய்தி முக்கியம்**

உலகச் செய்திகளை விட இந்தியச் செய்திகளுக்கும், இந்தியச் செய்திகளைவிட தமிழ்நாட்டுச் செய்திகளுக்கும், தமிழ்நாட்டுச் செய்திகளைவிட சென்னைநகரச் செய்திகளுக்கும் இந்தப் பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்தன.

ஒரு பத்திரிகை எந்த இடத்திலிருந்து வெளியாகிறதோ, எங்கு விற்பனை அதிகமாக இருக்கிறதோ அந்த இடத்துச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற அடிப்படை விதியை இவை நன்கு கடைப்பிடித்தன.

'தினத்தந்தி' இப்போது பத்து நகரங்களிலிருந்து ஒரே நேரத்தில் அச்சாகி அதிகாலை நான்கு மணிக்கு எல்லா இடங்களிலும் விற்பனைக்கு வருகிறது.

வெவ்வேறு பதிப்புகள்!

ஒவ்வொரு பதிப்பிலும் அந்தந்த மாவட்டச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப் படுகிறது.

**சென்னைக்கு வெளியே நாளிதழ் கிடையாது!**

'தினத்தந்தி' தொடங்கிய காலத்தில் சென்னைக்கு வெளியேயிருந்து நாளிதழ் நடத்தப்பட்டது கிடையாது! நடத்த முடியாது என்றும் நம்பப்பட்டது!

அப்போது தான் ஆதித்தன் மதுரையிலிருந்து 'தந்தி'யை வெளியிட்டார்.

ஆதித்தன் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர். நாடார் சமூகத்திலேயே முதன் முதலாக எம். ஏ. படித்தவர். லண்டன் சென்று படித்து **Bar-at-Law** பட்டமும் பெற்றவர்.

படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பத்திரிகைகளுக்கு செய்திகள் எழுதி அனுப்பி பணமும் சம்பாதித்தவர்.

இவர் தந்தை ஒரு வழக்கறிஞர். திருச்சியில் தொழில் செய்தவர்.

பிற்பட்ட சமூகத்தில் முன்னுக்கு வந்துவிட்ட குடும்பம்.

ஆதித்தனும் சில ஆண்டுகள் 'சிங்கப்பூரில் வெற்றிகரமான ஒரு வழக்கறிஞராக தொழில் செய்தவர்தான்!

அந்த நாட்களில் பத்திரிகைகள் எல்லாம் பிராமணர் கைகளிலேயே இருந்தன (இப்போது கூட நிலைமை அவ்வளவு மாறிவிடவில்லை. என்பது உண்மை தான்.)

எங்கும் பிராமண ஆதிக்கமே தான் இருந்தது:

பெரியார் தொடக்கிய பிராமணீய எதிர்ப்புப் போராட்டம் வலுத்துக் கொண்டு வந்த நேரம்!

ஆதித்தன் பத்திரிகையை 'இது எங்கள் பத்திரிகை' என்று நினைக்கும் போக்கு பிராமணர் அல்லாதார் மத்தியில் வந்தது.

பிராமணர் அல்லாதார் பலர் அதிகம் படிப்பறிவு இல்லாதவர்களாகஇருந்தார்கள்!

அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய நடையில் ஆதித்தன் செய்திகளை வெளியிட்டார்.

குறிப்பாக 'அந்த மக்கள் கூட்டத்தை' கருத்தில் கொண்டே செய்திகளை வெளியிட்டார்.

அவர்கள் சுவைக்கு ஏற்ற செய்திகளை வெளியிட்டார்.

**பெரிய மனிதர்களைப் பற்றிய சின்னத் தகவல்கள்**

செய்திகளையும் செய்திக் கட்டுரைகளையும் வெளியிடும் முறையில் 'குமுதம்' வித்தியாசமான ஒரு அணுகு முறையைக் கடைப்பிடித்தது.

'தினத்தந்தி'யும் தான்!

ஒரு பிரபலமான வழக்கு நீதிமன்றத்துக்கு வருகிறது என்று வைத்துக்கொள்வோம்.

மற்றப் பத்திரிகைகள் அந்த வழக்கின் சட்டப் பிரச்சினைகளை அலசும்.

'குமுத'மும் 'தினத்தந்தி'யும் சட்டப் பிரச்சினைகளை மேலோட்டமாகத் தொட்டுக் காட்டி விட்டு, அந்த வழக்கோடு தொடர்புடைய முக்கியமான புள்ளிகளைப் பற்றிய தனிப்பட்ட விஷயங்களையும் அந்தரங்கத் தகவல்களையும் சொல்லும்!

**இரண்டு பெண்டாட்டியா? செய்தி முக்கியம்**

அவர்கள் என்ன மாதிரி உடை அணிகிறார்கள், என்ன புத்தகம் படிக்கிறார்கள், கலியாணம் முடித்தவர்களா இல்லையா, எப்படிப் பொழுது போக்குகிறார்கள் என்பதைச் சொல்லும்!

அவர்கள் எந்த ஹோட்டலில் 'காப்பி' யை விரும்பிக் குடிக்கிறார்கள் என்பதையும்சொல்லும்!

அவர்களில் யாராவது இரண்டு பெண்டாட்டிக் காரராக இருந்தால் அந்தச் சங்கதியைக் கட்டாயம் சொல்லும்!

கருத்துக்களை அறிந்து கொள்வதை விட நிகழ்ச்சிகள் பற்றிப் பேசுவதையே எல்லாரும் விரும்புகிறார்கள்.

நிகழ்ச்சிகளை விட தனிப்பட்ட மனிதர்களின் நடத்தை பற்றி பேசுவதில் ஆர்வம் அதிகம்!

இது ஒரு அடிப்படையான உளவியல்!

பெரும்பாலன மனிதர்கள் இப்படித்தான்!

ஆலமரத்தடியிலும், மதவடியிலும், சங்கக்கடை வாசலிலும், மடங்களிலும், கோயில் வீதிகளிலும், அலுவலக கான்ரீன்களிலும் மனிதர்கள் நின்று கூடிப் பேசுவது எதைப்பற்றி?

சுத்தமான 'கிசு, கிசு'!

**Gossip!**

இந்த உணர்வுக்குத் தீனி போட்டன தினத்தந்தியும் 'குமுத' மும்!

இதைச் செய்வதில் ஒரு நிதானம் வேண்டும் - அதை இந்தப் பத்திரிகைகள் சரியாக அறிந்து செய்தன!

'நடிகை கர்ப்பமாக இருக்கிறார்?', மசக்கைக்கு என்ன சாப்பிடுகிறார், ஒரு நடிகையிடம் எத்தனை நாய்க்குட்டிகள் இருக்கின்றன' என்ற செய்திகள் தினத்தந்தியிலும் வரும் குமுதத்திலும் வரும்!

'நடிகை ரேகா கலியாணம் செய்து கொள்ளாமலே குழந்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்'என்று குமுதம் எழுதும்!

'இந்திரா காந்தி விமானத்தில் வரும்போது **Alwin Toffler** எழுதிய **Fultre Shock** என்ற புத்தகத்தை விரும்பிப் படித்துக்கொண்டு வந்தார்' என்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும்!

சினிமா அந்த மக்களின் மனதில் ஒரு மாயா உலகத்தை சிருஷ்டித்தது. ஒரு அற்புதமான கற்பன உலகத்தைப் படைத்தது.

(தொடரும்)

'சூரியகாந்தி' போட்டி இல.2

பரிசு

# ஆயிரம் ரூபாய்!

## ரூபா 1000.00

இது ஒரு சுவையான போட்டி.
கொஞ்சம் மூளைக்கு வேலை தரும் போட்டி:
நீங்கள் எழுதிய விடை சரியானதா என்பதை நீங்களே 'செக்' பண்ணி அறிந்து கொள்ளக் கூடிய போட்டி:
யார் வேணடுமானாலும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். வயதுக் கட்டுப்பாடு கூட எதுவும் கிடையாது:
பரிசுப் பணம் ஆயிரம் ரூபாய்!

முக்கியமான நிபந்தனை: போட்டிக்குரிய விடைகள் கீழே தரப்பட்டிருக்கும் படிவத்தில் மட்டுமேதான் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

விடைகள் அடங்கிய ஒட்டப்பட்ட தபால் உறைகளை எமது அலுவலகத்தில் நேரடியாகவும் ஒப்படைக்கலாம் அல்லது. தபாலிலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில்''சூரிய காந்தி போட்டி இல:2'' என்பதை மறவாது குறிக்கவும்.

ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதி அனுப்பி இருப்பின், பரிசுப் பணம் சமமாகப் பங்கிட்டு வழங்கப்படும். இப்போட்டி தொடர்பான பிற தொடர்புகள் எதுவும் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

தெளிவான எழுத்துக்களில் எழுதப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.

போட்டிக்கான விடைகள் யாவும் எமது அலுவலகத்தில் 20 - 02 - 98 மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்க வேண்டும்.

போட்டி தொடர்பான சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்
'சூரியகாந்தி'

சரி
போட்டி இதுதான்-

ஒரு சின்னப் பெருக்கல் கணக்கு.

**AB × CDE = ADCEB**

இங்கே இரண்டு இலக்கங்களாலான **AB** என்னும் எண், மூன்று இலக்கங்களாலான **CDE** என்னும் எண்ணைப் பெருக்க, விடையாக **ADCE** என்னும் ஐந்து இலக்கங்களைக் கொண்ட எண் கிடைக்கிறது.

இங்கே பெருக்கிய எண்களும் உண்டு, விடையாக வந்த எண்ணும் உண்டு.

ஆனால்-

இந்தப் பெருக்கல் கணக்கில் வரவேண்டிய இலக்கங்களுக்கு பதிலாக சங்கேதக் குறிகளாக **A, B, C, D, E** என்னும் எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.
ஒவ்வோர் எழுத்தும் பூச்சியம் அல்லாத ஒரே ஒரு இலக்கத்தை மட்டுமே குறிக்கிறது.
ஒவ்வோர் எழுத்தும் எந்த இலக்கத்தை குறிக்கிறது?
இதைத்தான் நீங்கள் கண்டு பிடித்து எழுத வேண்டும்.
எங்கே கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**ஆசிரியர், 'சூரியகாந்தி'**
**68/1 இராசாவின்தோட்டம் வீதி**
**யாழ்ப்பாணம்.**

நீங்கள் விடை எழுதி அனுப்ப வேண்டிய படிவம்:-

எழுத்துக்கள் குறிக்கும் இலக்கங்கள்

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| | | | | |

ஒவ்வோர் எழுத்துக்கு கீழேயும் அந்த எழுத்துக் குறிக்கும் இலக்கத்தை எழுதவும்

அனுப்பியவர்

பெயர் ..............................

முகவரி ..............................

..............................
கையொப்பம்

கோவை

# குண்டு வெடிப்பு சூத்திரதாரிகள் குண்டை வெடித்து தற்கொலை

கோவை குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் அறுவர் நேற்று பொலிஸ் சுற்றிவளைப்பின் போது தம்முடன் வெடிகுண்டுகளை வெடிக்க வைத்துத் தற் கொலை செய்து கொண்டனர். நேற்று முன்தினம் கோவையினில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் தங்கியிருந்த கட்டிடத்தினை பொலிசார் சுற்றிவளைத்து கைது செய்ய முற்பட்ட பொழுதே அவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

முதலில் சுற்றிவளைப்பினை முறியடிக்க முற்பட்ட அவர்கள் பொலிஸார் மீது வெடி குண்டுகளை வீசினார்கள் இம் மோதலில் நான்கு பொலிஸார் காயமடைந்தனராயினும் தொடர்ந்து முற்றுகையினை இறுக்கிய போதே அவர்கள் தம்முடன் வெடிகுண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டதாக தெரிய வருகிறது. இவர்கள் ''அல் ஹீமா'' ஜிகாத் கமிட்டியினையோ அல்லது தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தையோ சார்ந்தவர்களாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(மேலதிக செய்திகள் 2ஆம் பக்கத்தில்)

# கமநல சேவைத்திணைக்களத்தின் டிராக்டர் மீது துப்பாக்கிச் சூடு

நேற்றுமுன்தினமிரவு ஏழு மணியளவில் சுழிபுரம் தேரியந்தோட்டப்பகுதியில் வேலையினை முடித்து வீடு வந்து கொண்டிருந்த கமநல சேவை திணைக்களத்திற்குச் சொந்தமானடிராக்டர் மீதும் அதன் சாரதிமீதும் இனந்தெரியாதோர் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிப்பிரயோகத்தின்போது படுகாயமுற்ற சாரதியான ச. நாகராசா தொல்புரம் கிராமசேவையாளர், மற்றும் பொதுமக்களின் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் இரவு யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கடலில் படகுகள் தாக்கியழிப்பு கடற்படை வட்டாரம் தகவல்

பருத்தித்துறை முதல் திருகோணமலை வரையான பகுதியில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா கடற் படையினர் இன்பருட்டிப்பகுதியில் நேற்று அப்பாவி மீனவர்களிற்குச் சொந்தமான இரண்டு மீன் பிடிப்படகுகளை தாக்கியழித்துள்ளதாக 'புலிகளின் குரல்' செய்தி தெரிவித்துள்ளது.

இதே வேளை கடற்படையினர் ரோந்து சென்றபோது விடுதலைப்புலிகளின் மூன்று படகுகளைக் கண்டதை தொடர்ந்து அவை மீது பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டதாகவும், இத்தாக்குதலில் இரு படகுகள் முற்றாகத் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாகவும் எஞ்சிய ஒன்று காயமுற்றவர்களுடன் தப்பியோடி விட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## மட்டக்களப்...

துள்ளனர் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே. எல். எம். ஜி -1
ரி 56 1 ரக துப்பாக்கி -1
ரி 56 56 2 ரக துப்பாக்கிகள் - 2
ரி 86 ரக துப்பாக்கி - 1
ரி 56 ரவைக்கூடுகள் - 10
குண்டுகள் -9
நடுத்தர ரவைகள் - 300
இணைப்புகளுடன் நடுத்தர ரவைகள் - 275

உட்பட மேலும் பல பொருட்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

## முகம்...

ரி 56 - 2ரக துப்பாக்கிகள் - 03
49 மி.மீ கைத்துப்பாக்கிகள் - 02
எறிகணைகள் - 20
ஆர். பி. ஜி. எறிகணைகள் - 04
ஏ. கே. ரவைக் கூடுகள் - 04
குண்டுகள் - 03
புல்லட் புறாவ் கவசங்கள் - 03

என்பனவை கைப்பற்றப்பட்டதாக ''புலிகளின்குரல்'' தெரிவிக்கிறது. இம்மோதலின் போது தமது தரப்பில் இரு புலிகள் களப்பலியானதாகவும் அறிவித்துள்ளனர்.

# தி.மு.க அரசு தகுந்த பாதுகாப்பு அளிக்கவில்லை

## பாரதீய ஜனதா

கோவையில் நடந்த குண்டு வெடிப்புக்கள் பாரதீய ஜனதாக்ககட்சித் தலைவர்கள் அடல்பிகாரி வாஜ்பாய், அத்வானி ஆகியோருக்கு வைக்கப்பட்ட குறியே என பாரதீய ஜனதாக்கட்சி குற்றம் சாட்டி உள்ளது அத்வானி பேச இருந்த ஆர். எல். புரத்தில் மட்டும் நான்கு குண்டுகள் வெடித்துள்ளன தி. மு. க அரசு இது விடயத்தில் தீவிரகவனம் செலுத்தத்தறி உள்ளதாகவும், தி. மு. க ஆட்சியினை முறையாக நடத்த வேண்டும் அல்லது பதவி விலகவேண்டும் எனவும் அக்கச்சி மேலும் தெரிவித்துள்ளது.

# இராஜதந்திர வழியை ஈராக் விரும்புகிறது

ஈராக்கில் ஆயுத பரிசோதனையை ஐ. நா சபை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை இராஜதந்திர முறையில் தீர்க்கவே தனது நாடு முனைவதாக ஈராக்சின் உப ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் விசேட தூதுவர் மூலம் இச் செய்தியை அவர் தெரிவித்தார். ஈராக் மீது அமெரிக்கா இராணுவ தாக்குதலை மேற் கொண்டால் மத்திய கிழக்கில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் அமெரிக்காவின் நலனில் பாதிப்பை ஏற்படுத்த ஈராக் தயங்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கசிப்புக் காய்ச்சினாயா ? சுவருக்கு வெள்ளை அடி

கசிப்புக் காச்சி கோலோச்சும் நபர் ஒருவர் குறித்து பொது மகன் ஒருவர் இரகசியத் தகவலொன்றை பொலிஸாருக்கு வழங்கினர். பாய்ந்தேறினர் பொலிஸார். புறப்பட்டதுஜீப்வண்டி கையிருப்பிலிருந்த கலன் கலனான கசிப்புடன் அகப்பட்டுக் கொண்டார் நபர்.

விசாரணையைத் தொடங்கினார், உயரதிகாரி கோர்ட் போய் ஜெயிலில் அடைபட விருப்பமா? அல்லது நான் சொன்னதை செய்கின்றாயா? சொன்னதைச் செய்ய தயாரான வரிற்கு கிடைத்த தண்டனை அதிர்ச்சியானது. எங்கள் பொலிஸ் நிலையத்திற்கு வெள்ளை அடிக்குமாறு கிடைத்த தீர்ப்பினை சிரமேற் கொண்டு கசிப்பு கலவை தயாரிக்க வைத்திருந்த சுண்ணாம்பு சுவர்களை வெள்ளையாக்கியது.

தற்போது தொடர்ந்தும் தொழில் நடாத்தும் அவர் கோண்டாவிலை சேர்ந்தவர். பொலிஸ் நிலையம் யாழ்-பருத்தித்துறை வீதியில் உள்ளது, அது எது என ஊகித்து கண்டு பிடியுங்களேன்.

# சோனியாவின் வரவால் பலம் பெறும் காங்கிரஸ்

சோனியா தேர்தலில் பிரச்சாரம் செய்ய இறங்கியதுமே தேர்தல் கணிப்புக்கள் எல்லாம் திசைமாறத் தொடங்கி விட்டன.

தேர்தல் அறிவிக்கப் பட்ட நாட்களில் பாரதீய ஜனதாவின் செல்வாக்கு மிக அதிகமாக இருந்தது. காங்கிரசின் செல்வாக்கு மிக குறைவாக இருந்தது.

ஆனால் இப்போது பாரதிய ஜனதாவுக்கு மிக நெருக்கமாக காங்கிரஸ் வந்துவிட்டது இவ்வாறு டெல்லி நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

சோனியாவின் தேர்தல் பிரச்சாரத்தால் தனித்து அறு பெருன்பான்மை பெற்ற கட்சியாக காங்கிரஸ் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்கிறார் மேற்படி கருத்துக் கணிப்புக்கு பொறுப்பாக இருந்து நடத்திய சௌசல்யா சம்பத்.

# 25-3-98 வரை பல்கலையில் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்திற்கு அண்மையில் வெளியிடப்பட்ட வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் 97-98 கல்வி ஆண்டுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள துறைகளுக்கு எதிர்வரும் 26ந்திகதி முதல் 25-3-98 வரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என பதிவாளர் கலாநிதி க. குணராசா அவர்கள் தெரிவிக்கிறார்.

# விவசாயிகள் மீது கெடுபிடி வயல் வேலைகள் பாதிப்பு

(கரவெட்டி)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் அமோகமாக வயல்கள் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்நேரம் வடமராட்சியில் குறிப்பாக கரவெட்டி மக்கள் மட்டும் கெடுபிடிகளால் வயல்களிற்கு செல்ல முடியாது சிரமப்படுகின்றனர்.

இப்பகுதி மக்களினது வயல் நிலங்கள் பெரும்பாலும் கரவெட்டியின் தெற்குப் பகுதிகளிலேயே உள்ள நிலையில் அறுவடைக்கு செல்லும் தொழிலாளர்கள் மீதும், அறுவடை முடிந்து விளை பொருட்களுடன் வரும் வாகனங்களின் மீதும் யாக்கரு-ஆயம் சந்தியிலுள்ள காவலரன் இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வைக்கோலுடன் வரும் டிராக்டர்கள் பல மணி நேரம் மறித்து வைக்கப்பட்டு முழுவதும் நிலத்தில் பறிக்கப்பட்டு சோதனை செய்ய வேண்டுமென்று பணிக்கப்படுவதாகவும் தெரிகின்றது.

இது தொடர்பாக நெல்லியடி பிரஜைகள் குழுவினர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைவையினை விளக்கிய போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட போதும் இன்று வரை கெடுபிடிகள் நீங்கவில்லையென்று தெரிகிறது. எனினும் இவ்வயல்களும் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சிக்கு பத்திரிகையாளர்

கிளிநொச்சி, பரந்தன் பிரதேசங்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டைச் சேர்ந்த நாற்பத்தைந்து பத்திரிகையாளர்கள் நேற்று இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிளிநொச்சி' பரந்தன் பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை நிருபிக்கும் நோக்குடனேயே இப்பத்திரிகையாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# இளவாலை வீதி சேதம்

விளான் இளவாலை வீதி மிக மோசமான நிலையில் உள்ளது. இவ் வீதி பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது. இதனால் இவ்வீதியால் போக்கு வரத்துச் செய்வோர் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

# முதலிடம் பெற்ற நாடகம்

சனசமூக நிலையங்களின் சமாசம் அரியாலை சரஸ்வதி நிலைய முன்றலில் நடாத்திய நாடகப் போட்டியில் ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையத்தினரின் தயாரிப்பான 'அன்பு இல்லம்' என்ற நாடகம் முதலிடம் பெற்றது. இந் நாடகத்தினை நவாலியூர் திரு. சி. என். செல்லத்துரை நெறிப்படுத்தினார். எதிர்வரும் 1-3-98 ல் 'அன்பு இல்லம்' நாவலர் கலாச்சார மண்டபத்தில் நிகழவிருக்கும் சனசமூகநிலைய சமாசத்தின் பரிசளிப்பு விழாவில் மீண்டும் மேடையேற்றப்படும்.

(சி-1)

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 16ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாண என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசாமி.